இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 260 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 17 – புதன்கிழமை 30 ஏப்ரல் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 260 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 17 - Wednesday 30 April 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

### அகவிலைப்படி 2 சதவிகிதம் – பண்டிகை முன்பணம் – கல்வி முன்பணம் உயர்வு உள்ளிட்ட

# அரசுப் பணியாளர் நலனுக்கு 9 அறிவிப்புகள்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஏப். 30 -**

**அகவிலைப்படி இரண்டு சதவிகிதம், ஓய்வூதியதாரர்களின் பண்டிகை முன்பணம், கல்வி முன்பணம் உயர்வு உள்ளிட்ட அரசுப் பணியாளர் நலனுக்கு 9 அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் வெளியிட்டார்.**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை விதி 110ன்கீழ் வெளியிட்டு, சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தங்களின் அனுமதியோடு 110 விதியின்கீழ் அரசு ஊழியர்கள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிர்வாகத்தினுடைய தூண்களாவும், அரசின் கரங்களாவும் விளங்குபவர்கள் நம் அரசு ஊழியர்கள். இந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களும், பல்வேறு துறைகளில் திட்டப் பணிகளும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் நம்முடைய தமிழ்நாடு பலவகையில் முதலிடத்திலேயும் முன்னோடி மாநிலமாகவும் திகழ்கிறது.

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரின் உழைப்பும், சீரிய பங்களிப்பும் இதற்கு ஒரு மிக முக்கியமான காரணம். அரசு நடைமுறைப்படுத்தி வருகிற நலத் திட்டங்கள், யாருக்கும் விட்டுப் போகாமல், அனைத்து மக்களையும் சென்றடைய பணியாற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் இந்த தருணத்தில் தமிழ்நாடு அரசின் சார்பிலேயும், தனிப்பட்ட முறையிலேயும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, அரசு ஊழியர் நலன் கருதி, அவர்களுக்காக ஒன்பது அறிவிப்புகளை தங்கள் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

**முதல் அறிவிப்பு;** கோவிட் 19 பெருந்தொற்றுக் காலத்திலே, அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெரும் சுமையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களுக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறையை, 01.04.2026 முதல், 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் வகையில் மீண்டும் செயல்படுத்திட 2025-2026ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இருந்தாலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை, இந்த ஆண்டே செயல்படுத்திட கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாட்களில், 15 நாட்கள் வரை 1.10.2025 முதல் சரண் செய்து பணப்பயன் பெறலாம் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பின்படி, சுமார் 8 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 3 ஆயிரத்து 561 கோடி ரூபாய் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

**அகவிலைப்படி உயர்வு 16 லட்சம் பேர் பயனடைவர்!**

**இரண்டாவது அறிவிப்பு;** 01.01.2025 முதல் 2 விழுக்காடு அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் 01.01.2025 முதல் அகவிலைப்படி 2 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வினை நடைமுறைப்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 1252 கோடி ரூபாய் கூடுதல் நிதி செலவிடப்படும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.4.2025) சட்டமன்றப் பேரவையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை விதி 110ன் கீழ் அறிவித்தார்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

# தமிழ்நாடு காவலர் நலனுக்கான திட்டங்கள்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 30 -**

**தமிழ்நாடு காவலர் நலனுக்கான திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரவையில் அறிவித்தார்.**

இதுகுறித்து சட்டமன்றப் பேரவையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ். மணியன் பேசியதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதில் வருமாறு:-

உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் அவர்கள் இங்கே நீண்ட நேரம் பேசியிருக்கிறார்; பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்; பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அவற்றை விரைவாக முடித்துத்தர வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நாளையதினம் நான் பதிலுரை ஆற்றுகிறபோது விரிவான விளக்கத்தை அளிக்க இருக்கிறேன். இருந்தாலும், ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் இப்போது எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

உறுப்பினர் பேசுகிறபோது, காவலர் நலத் திட்டங்களைப் பற்றிப் பேசினார். அவையெல்லாம் என்னவாயிற்று என்று அவர் கேள்வியைக் கேட்டிருக்கிறார். தமிழ்நாடு காவல் துறையில் தி.மு.க. ஆட்சியில்தான் பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதில், முத்தாய்ப்பாக நான் சொல்ல வேண்டுமென்றால், ஒரு பெரிய பட்டியலைப் போட முடியும். இருந்தாலும், சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**கல்வி பரிசுத் தொகை உயர்வு!**

காவலர் சேம நல நிதியின்கீழ் உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு வழங்கும் நிதியினை 4 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ் இருக்கின்ற உறுப்பினர் உயிரிழந்தால், வழங்கப்படக்கூடிய நிதி 50 ஆயிரம் ரூபாய் என்றிருந்தது, 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆம் வகுப்பு தேர்வில் முதல் 10 rankக்கில் வருகின்ற காவலர்களுடைய பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி பரிசுத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக, முதல் rankக்கு வழங்கப்பட்ட ரூ.6,500/ என்பது ரூ.13,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் rankக்கு வழங்கப்பட்ட ரூ.4,000/ என்பது ரூ.9,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மூன்றாம் rankக்கு வழங்கப்பட்ட ரூ.2,500/ என்பது, ரூ.5,000/ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. நான்காவது முதல் பத்தாவது rank வரை இருக்கக்கூடியவர்களுக்கு ரூ.2,000/லிருந்து ரூ.4,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதேபோல், 12 ஆம் வகுப்புத் தேர்வில், முதல் 10 rankக்குள் வரக்கூடிய காவலர்களுடைய பிள்ளைகளுக்கு பரிசுத் தொகை உயர்த்தப்பட்டு, குறிப்பாக முதல் rank வருகிறவர்களுக்கு ரூ.7,500/லிருந்து, தி.மு.க. ஆட்சியில் ரூ.15,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் rankக்கு ரூ.6,500/லிருந்து ரூ.11,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மூன்றாம் rankக்கு ரூ.3,500/லிருந்து ரூ.7,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 4 முதல் 10 rank வரை இருக்கக்கூடியவர்களுக்கு ரூ.2,500/லிருந்து ரூ.5,000/ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதிக மதிப்பெண் பெறக்கூடிய 100 மாணவர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு உயர் கல்வி வழங்கக்கூடிய திட்டம், 200 மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், அவர்களுக்கு 25,000 ரூபாய் என்றிருந்த உயர் கல்வித் தொகை 30,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

**கருணைத் தொகை உயர்வு!**

காவலரோ அல்லது அவர்களது வாரிசோ பணியிலிருக்கும்போது கொல்லப்பட்டால் வழங்கப்படுகின்ற கருணை நிதி 15 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

Police insurance திட்டப்படி பணியில் இருக்கக்கூடிய காவலர் உயிரிழந்தால் வழங்கப்படுகிற 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகை 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவப் பரிசோதனைத் திட்டம் காவலருடைய மனைவிக்கும், பெண் போலீசாருக்கும் விரிவுபடுத்தப்பட்டது. போலீஸ் உணவு சலுகைகள் ஊர்க்காவல் படையினருக்கும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

காவலர் முதல் ஆய்வாளர் வரை 2,249 பேருக்கு சிறைத் தண்டனைகள் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. கருணை அடிப்படையில் 2,592 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது. காவலர் முதல் ஆய்வாளர் வரை இடர்ப்படி risk allowance 800 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

D.S.P. மற்றும் கூடுதல் D.S.P.க்களுக்கு 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. தலைமைக் காவலர் வரை இருக்கின்றவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. காவல் உதவி ஆய்வாளர், சிறப்பு காவல் உதவி ஆய்வாளருக்கு 15 நாட்களுக்கு ஒரு நாள் leave வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு சிறப்பு போலீஸ் Tamil Nadu Special Police Battalionல் பணிபுரியக்கூடிய அனைத்து காவலர்களுக்கும் weekly off விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாம் நிலை காவலர் முதல் ஆய்வாளர் வரை bus pass, Smart ID card 29 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி காவலர்களுக்கு அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களையெல்லாம் இன்னும் நான் பட்டியலிட முடியும். இந்த ஆட்சியில் அனைத்து தரப்பினரையும் பேணிக் காப்பதைப் போலவே மக்களின் பாதுகாப்பில் இரவு, பகலாக பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய, அயராது உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய காவலர்களின் நலனையும் பேணி பாதுகாத்து வருகிறோம் என்று உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

### பொதுமக்களுக்கு நம்பிக்கை அளித்து ‘டெபாசிட்’ பெற்று – பொதுமக்களை

# ஏமாற்றிய நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கழக அரசு தீவிரம்!

## சட்டப்பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, ஏப்.30-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம் காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா பேசியதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதில் வருமாறு :-**

நம்முடைய உறுப்பினர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் உரையாற்றுகிறபோது deposit பெற்று பொதுமக்களை ஏமாற்றுவோர்மீது கடும் நடவடிக்கையை எந்தளவிற்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்ற வினாவை எழுப்பியிருக்கிறார். அதற்காக ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்பு கிறேன். அதற்காக தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி பொதுமக்கள், ஏற்கெனவே ஏமாந்திருக்கக்கூடிய பொதுமக்கள் இன்னும் அவர்கள் விழிப்புணர்வுகூட ஏற்படாமல் இன்னும் ஏமாந்து கொண்டிருக்கிறார்களே என்ற வருத்தத்தோடு சுட்டிக்காட்டும் அதேநேரத்தில், நமது அரசால் பெருமளவில் அதைக் கட்டுப்படுத்தி ஓரளவிற்குக் குறைத்திருக் கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டெபாசிட் பெற்று பொது மக்களை ஏமாற்றியுள்ள நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் 97 கோடியே 41 இலட்சம் ரூபாய் மீட்கப்பட்டு டெபாசிட்தாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நான்கு ஆண்டுகளிலேயே 102 கோடியே 96 இலட்சம் ரூபாய் டெபாசிட்தாரர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியில் ஏமாற்றிய நிறுவனங்களின் 854 கோடியே 74 இலட்சம் ரூபாய் சொத்துகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 2,670 கோடியே 89 இலட்சம் மதிப்புள்ள சொத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட சொத்துக்களை முடக்கும் அரசு ஆணைகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 53. ஆனால், கழக ஆட்சியில் 108 அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; அ.தி.மு.க. ஆட்சியில் 103 கோடியே 24 இலட்சம் ரூபாய் சொத்துகள் மட்டுமே attach செய்யப்பட்ட நிலையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொதுமக்களைஏமாற்றியநிறுவனங்களின் 319 கோடியே 29 இலட்சம் ரூபாய் சொத்துகள் attach செய்யப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, பொதுமக்களுக்கு நம்பிக்கை அளித்து deposit பெற்று ஏமாற்றியிருக்கக்கூடிய நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுக்க இந்த அரசு முன்பிருந்த அ.தி.மு.க. அரசைவிட தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் உறுப்பினருக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

### ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டம்:

# உயர் இரத்த அழுத்தம் - நீரழிவு நோய் பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

## கணக்கெடுப்பின் முடிவு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.30-

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாட்டில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களின் பாதிப்புகளை கட்டுப்படுத்துகிறது என்ற கணக்கெடுப்பின் முடிவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மருத்துவச் சேவைகளை மட்டுமல்ல, அதன் வழியே சிறப்பான முடிவுகளையும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் அளிக்கிறது.**

**உயர் இரத்த அழுத்தத்தை 17 விழுக்காடும், நீரிழிவு நோயை 16.7 விழுக்காடும் கட்டுப்படுத்திப் பொது மருத்துவச் சேவையின் வெற்றிக்கான அலகுகோலை மாற்றியமைத்து வருகிறது.**

**மக்கள் மருத்துவமனைகளைத் தேடி வருவதற்காகக் காத்திராமல், மக்களின் வீடுகளை நாடிச் சென்று ஈட்டிய வெற்றி இது! இந்தியா முழுவதும் பொதுமருத்துவச் சேவைக்கான ‘மாதிரி’யாக இது மாறியுள்ளது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.